தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**

# அரையாண்டுப் பரீட்சை 2021

ஆண்டு: 4 திகதி: 12.06.2021

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. நி. இரவீந்திரராஜா
திருமதி. ம. விஜயகுமார்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

- BLANK PAGE -

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**கீழே தரப்பட்டுள்ளவற்றை வாசித்து, பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று பாடியுள்ளார் ஔவையார். எம்மைப் பெற்று அன்புடன் வளர்ப்பவர் தான் எமது தாயார். அவர் சிறுகுழந்தையாக நாம் இருந்த காலம் முதல் தொடங்கி, பெரியவர்களாக வளர்ந்த பின்னரும் கூட குறையாத அன்புடன் எம்நலன் பேணி வருவார். நாம் உண்பதற்கு நல்ல உணவுகளைச் சமைத்துப் பரிமாறுவார். உயர்ந்த பண்புகளைச் சொல்லித் தருவார். நோய் வந்த காலத்தில் எமக்குத் துணையாக இருந்து கவனிப்பார். பள்ளிப் பாடங்களைக் கற்பதற்கு உதவி செய்வார். விரும்பிய பொருள்களை வாங்கித்தந்து எம்மைச் சந்தோசப்படுத்துவார். இன்னும் எத்தனையோ பணிகளை எமக்காக செய்வார். கூலி வாங்காத ஒரு வேலையாள் போன்று பணியாற்றும் எமது அன்னையர்களுக்காக மேலை நாட்டவர் "**அன்னையர் தினம்**" என்று ஒரு நாளைக் குறிப்பிட்டு வருடம் தோறும் அதைக் கொண்டாடி வருகின்றனர். அமெரிக்காவில் தான் இது முதலில் ஆரம்பிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக தமிழர்களும் அவர்கள் வாழும் நாட்டிற்கேற்றவாறு குறிப்பிடப்பட்ட தினங்களில் இதைக் கொண்டாட ஆரம்பித்துள்ளனர். ஆயினும் எமது தமிழர் பண்பாட்டின்படி நாம் எமது பெற்றோர்களைப் பணிந்து எமது வாழ்நாள் முழுவதும் அவர்களை அன்புடன் நடாத்த வேண்டும். அவர்களின் முதுமைக் காலங்களில் அவர்களைப் பராமரிக்க வேண்டும். அருகில் இருந்து உதவி செய்யமுடியாதவர்கள் அவர்கள் விருப்பப்படி சிறந்த மனிதர்களாக வாழவேண்டும். இதுவும் நாம் அவர்களுக்குச் செய்யும் சேவைகளில் ஒன்றாக இருக்கும்.

1. தாய்மாருக்காகக் கொண்டாடப்படும் தினத்தை எவ்வாறு அழைப்போம்?

2. இத்தினம் முதலில் எங்கு கொண்டாடப்பட்டது?

3. எமது தாயார் எமக்குச் செய்யும் சேவைகள் இரண்டு தருக?

4. தமிழர் பண்பாட்டில் எமது அன்னயைரை எவ்வாறு போற்ற வேண்டும்?

5. இங்கு ஔவையார் தாய் தந்தையரை எவ்வாறு குறிப்பிட்டுள்ளார்?

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**ஒத்தசொல் தருக**

1. வானம் = ______________________________
2. கண் = ______________________________
3. பாடசாலை = ______________________________
4. உணவு = ______________________________
5. மகிழ்ச்சி = ______________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பிரித்து எழுதுக**

1. தகவற்சாதனம் = ______________________________
2. நுழைவுச்சீட்டு = ______________________________
3. காலைக்காட்சி = ______________________________
4. கடற்கரை = ______________________________
5. ஒளிக்கதிர்கள் = ______________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக**

**சமயச்சின்னம் கடவுச்சீட்டு அரிசியை தகவல்களை வானம்**

1. மாலை நேர ______________ இளஞ்சிவப்பு நிறமாக இருந்தது.
2. விமானத்தில் பயணம் செய்ய ______________ அவசியம்.
3. முக்கிய _________________ நாம் குறிப்புப்புத்தகத்தில் குறித்து வைக்கலாம்.
4. ஆதிவாசி சிலருக்கு முதலை ஒரு _________________.
5. பொங்கல் செய்வதற்கு நாம் ______________ பயன்படுத்துவோம்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளம் இடுக.**

1. மைனா மிகச்சாந்தமான பறவை (     )
2. இடியப்பம் தமிழரின் உணவு (     )
3. அவுஸ்திரேலியக்காடுகளில் யானைகளைக் காணலாம் (     )
3. மேல்பேணில் விமானநிலையம் ஒன்று உண்டு (     )
4. பாரதியார் சிறுவர்களுக்காக பாப்பாபாடல் பாடியுள்ளார் (     )

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் உமது உறவினருக்கு ஒரு கடிதம் எழுதுக.**

1. கொறோனா வைரசின் பாதிப்பில் இருந்து காக்க நாம் என்ன நடைமுறைகளைக் கையாள வேண்டும் என்ற சுருக்கமான அறிவுரை.

2. தமிழ்ப்பாடசாலையில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் நீர் முதல் இடத்தைப் பெற்றது பற்றி.

3. நீர் விடுமுறையில் சென்ற சுற்றுலா பற்றி….

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 50 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக.**

1. தமிழரின் உணவு
2. உமக்குப் பிடித்த பறவை
3. விமானப்பயணம்
4. தைப்பொங்கல்